முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் I பரீட்சை – 2026 சனவரி

(101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2026-01-24
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 11
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக*

1.1 பின்வருவனவற்றில் கணக்கீட்டு வெளியீடாக அமைவது எது?

(1) பரீட்சை மீதி
(2) பேரேட்டுக் கணக்கு
(3) கொள்வனவு நாட்குறிப்பேடு
(4) வருமானக் கூற்று.

1.2 பின்வருவனவற்றில் ஒரு முதன்மைப் பதிவேடாக **அமையாதது** எது?

(1) பேரேடு
(2) காசுப் பெறுவனவுகள் நாட்குறிப்பேடு
(3) பொது நாட்குறிப்பேடு
(4) விற்பனைகள் நாளேடு.

1.3 பின்வருவனவற்றில் கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் ஒருவரால் பின்பற்றப்படும் நெறிமுறைக் கோவையின் ஒரு கோட்பாடாக அமைவது எது?

(1) நேர்மை
(2) தொழில்சார் திறமை
(3) சார்பற்ற நிலை
(4) மேற்கூறிய யாவும்.

1.4 ஒரு தனியுடமை வியாபாரமான **பெரேரா டிரேடர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

	ரூ.
2024 ஏப்ரல் 01 இல் மூலதனம்	1,800,000
2025 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்கள்	4,850,000
ஆண்டின்போது உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம்	800,000
ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள்	450,000
2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்	1,250,000

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **பெரேரா டிரேடர்ஸின்** 2025 மார்ச் 31 இலான பரிப்புக்கள் :

(1) ரூ. 3,050,000/-. (2) ரூ. 1,450,000/-.

(3) ரூ. 3,450,000/-. (4) ரூ. 1,350,000/-.

1.5 ஒரு தனியுடமை வியாபாரத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான ஓர் ஊடுசெயலின் பின்வரும் தாக்கம் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது :

(ரூ.)

சொத்துக்கள்			=	**உரிமையாண்மை**	+	**பரிப்புக்கள்**
தொக்கு	**+**	**வியாபார வருமதிகள்**				
- 65,000		+ 90,000		+25,000		-

மேற்படி தகவல்களின் அடிப்படையில், மேலுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு மிகவும் பொருத்தமான ஊடுசெயலைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) ரூ. 65,000/- கிரயமான பொருள்கள் ரூ. 90,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(2) உரிமையாளர் தனது சொந்தப் பாவனைக்காக ரூ. 65,000/- பெறுமதியான பொருள்களை எடுத்துள்ளார். இந்தப் பொருள்களின் கிரயம் ரூ. 90,000/- ஆக இருந்தது.

(3) ரூ. 65,000/- கிரயமான பொருள்கள் ரூ. 90,000/- கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(4) ரூ. 25,000/- கிரயமான பொருள்கள் ரூ. 90,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

1.6 தமது முதலீட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதே வேளை, கம்பனியின் இலாபத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையில் முதன்மையாக அக்கறை கொண்ட நாட்டதாரர் (stakeholder) யார்?

(1) பங்குதார்கள். (2) வாடிக்கையாளர்கள்.

(3) ஊழியர்கள். (4) போட்டியாளர்கள்.

1.7 **ஜெப்ரி** என்பவர் ரூ. 500,000/- ஐக் காசாகவும் ரூ. 800,000/- பெறுமதியான வாகனத்தையும் இட்டு, ஒரு வணிகத்தை (தனியுடமை வியாபாரம்) ஆரம்பித்தார். அவரது வணிகத்தின் பேரேட்டுக் கணக்குகளில் இந்த ஊடுசெயலைப் பதிவு செய்கின்ற சரியான முறை :

(1) மூலதனக் கணக்கு வரவு ரூ. 1,300,000/-, மோட்டார் வாகனக் கணக்கு செலவு ரூ. 800,000/- மற்றும் காசுக் கணக்கு செலவு ரூ. 500,000/-.

(2) காசுக் கணக்கு வரவு ரூ. 500,000/-, மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ. 800,000/- மற்றும் மூலதனக் கணக்கு செலவு ரூ. 1,300,000/-.

(3) காசுக் கணக்கு வரவு ரூ. 500,000/-, மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ. 800,000/- மற்றும் எடுப்பனவுகள் கணக்கு செலவு ரூ. 1,300,000/-.

(4) காசுக் கணக்கு வரவு ரூ. 500,000/-, மூலதனக் கணக்கு வரவு ரூ. 800,000/- மற்றும் மோட்டார் வாகனக் கணக்கு செலவு ரூ. 1,300,000/-.

1.8 காசுப் பெறுவனவைப் பொருட்படுத்தாது குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதியில் வருவாய் (வருமானம்) ஏற்பிசைவு செய்யப்படுகிறது. இந்தச் செய்கையுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு (2) உரிம (அலகுசார்) எண்ணக்கரு

(3) அட்டுறு எண்ணக்கரு (4) பண அளவீட்டு எண்ணக்கரு.

1.9 **ரமேஷ் டிரேடர்ஸின்** 2025 டிசெம்பர் 31 இலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு (சாதகமான) மீதி ரூ. 475,000/- ஆக இருந்த அதே வேளை இந்த மீதி வங்கிக் கூற்றின் மீதியுடன் இணங்காது வேறுபட்டுக் காணப்பட்டது. 2025 டிசெம்பர் 31 இல் உள்ள நிலைமையின்படி கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத மற்றும் தேறாத காசோலைகளின் பெறுமதிகள் முறையே ரூ. 45,000/- உம் ரூ. 65,000/- உம் ஆகும். மேலும், வங்கியானது வங்கிக் கட்டணங்களாக ரூ. 1,000/- ஐ வசூலித்துள்ளதுடன் இது தொடர்பில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் கவனத்திற் கொள்ளப்பட வில்லை.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 டிசெம்பர் 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதி :

(1) ரூ. 454,000/-. (2) ரூ. 494,000/-. (3) ரூ. 365,000/-. (4) ரூ. 495,000/-.

1.10 வணிகத்தின் உரிமையாளரது மின்சாரக் கட்டணப் பட்டியலுக்கு வணிகத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் இது வணிகத்தின் எடுப்பனவாகக் கவனத்திற் கொள்ளப்பட்டது. மேற்படி செய்கை தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) அட்டுறு எண்ணக்கரு. (2) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

(3) உரிம எண்ணக்கரு (4) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு

கீழே **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக..*

1.11 நம்பிக்கைக்குரிய பிரதிநிதித்துவம் (Faithful representation) என்பது நிதித் தகவல்களின் அடிப்படைத் தரம்சார் பண்பாகும்.

1.12 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, வணிகத்தின் அனைத்து வழுக்களையும் மோசடிகளையும் கண்டறிய முடியும்.

1.13 விற்பனைக் கணக்கானது ஒரு பெயரளவுக் கணக்கிற்கான உதாரணமாகும்.

1.14 விரைவுப் புத்தகக் (QB) கணக்கீட்டுத் தொகுப்பை ஒரு விஷேட கணக்கீட்டுத் தொகுப்பாக வகைப்படுத்தலாம்.

1.15 முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின்படி, தொக்குகள் கிரயத்தில் அல்லது நிகரத் தேறத்தக்க பெறுமதியில் (NRV) எது குறைவானதோ, அதில் மதிப்பிடப்படுகின்றன.

1.16 தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

1.16 "சொத்து" என்னும் பதத்தை வரையறுக்க.

1.17 பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் இரண்டு (02) வகையான ஊடுசெயல்களைக் குறிப்பிடுக.

1.18 "தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு" என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

1.19 வருமானக் கூற்றின் இரண்டு (02) மூலகங்களைக் (elements) குறிப்பிடுக.

1.20 **மாலா டிரேடர்ஸின்** பின்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தொடர்புடைய மூல ஆவணத்தை அடையாளங் காண்க :

(a) கடனடிப்படையில் அலுவலகப் பாவனைக்காக ரூ. 250,000/- இற்கு கணினியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(b) காசு அடிப்படையில் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ. 100,000/- பெறுமதியான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 02

CAT எஞ்சினியரிங் என்பது பல்வேறு இரும்புப் பொருள்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனியாகும். பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **CAT எஞ்சினியரிங்** கம்பனியின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

விபரம்	ரூ.
2024 ஏப்ரல் 01 இல் மூலப்பொருள் இருப்பு	180,000
ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள்	7,750,000
மூலப்பொருள்களின் உள்வந்த வண்டிக்கூலி	230,000
2024 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	190,000
நேர் கூலிகள்	2,400,000
தொழிற்சாலைக்கான காப்புறுதி	240,000
மின்சாரம்	350,000
தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம்	660,000
தொழிற்சாலை இயந்திரங்களின் பழுதுபார்ப்புகள்	130,000
வாடகை	900,000
தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம்	400,000
தேய்மானம் - மோட்டார் லொறி	500,000

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

விபரம்	கிரயம் (ரூ.)
மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்)	520,000
புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	260,000

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

செலவினம்	தொழிற்சாலை	அலுவலகம்
மின்சாரம்	90%	10%
வாடகை	65%	35%

(3) பொறியும் இயந்திரமும் தொழிற்சாலை நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதுடன், மோட்டார் லொறி முடிவுப் பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

(4) தயாரிக்கப்பட்ட பொருள்கள், உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபத்துடன் வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **CAT எஞ்சினியரிங்** கம்பனியின் உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 03

சர்மா கபே என்பது **சர்மா** என்பவரால் 2025 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கோப்பிக் கடை ஆகும்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேட்டின்) பொழிப்பு பின்வருமாறு :

காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)

பெறுவனவுகள்	வரவு (ரூ.)	கொடுப்பனவுகள்	செலவு (ரூ.)
ஆரம்ப மூலதன முதலீடு	2,000,000	காசுக்கு கொள்வனவுகள்	1,250,000
வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள்	2,500,000	வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள்	3,500,000
காசுக்கு விற்பனைகள்	4,000,000	நிலையான வைப்புகள்	800,000
		தன்னியக்க கோப்பி இயந்திரத்தின் கொள்வனவு (2025 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது)	600,000
		சில்லறைக் காசுக்கு மாற்றப்பட்ட தொகை	80,000
		சம்பளங்களும் கூலிகளும்	500,000
		விளம்பரப்படுத்தல் செலவினங்கள்	200,000
		பாதுகாப்புச் செலவினங்கள்	400,000
		செலுத்திய மின்சார, நீர்க் கட்டணங்கள்	300,000
		செலுத்திய வாடகை	440,000
		மீதி C/F	430,000
	8,500,000		**8,500,000**
மீதி B/F	430,000		

(2) 2025 டிசெம்பர் 31 இல் வருமதி மற்றும் சென்மதி மீதிகள் பின்வருமாறு :

	ரூ.
வியாபாரக் கடன்பட்டோர்	1,400,000
வியாபாரக் கடன்கொடுத்தோர்	2,600,000
செலுத்த வேண்டிய மின்சார, நீர்க் கட்டணங்கள்	25,000

(3) கோப்பி இயந்திரமானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும்.

(4) கீழ்வரும் செலவினங்கள் சில்லறைக் காசிலிருந்து செலுத்தப்பட்டன :

- பயணச் செலவினங்கள் : ரூ. 25,000/-.
- அமயக் கூலிகள் : ரூ. 35,000/-.
- அலுவலகச் செலவினங்கள் : ரூ. 5,000/-.

(5) 2025 டிசெம்பர் மாதத்திற்கான வாடகை ரூ. 40,000/- ஆக இருந்ததுடன் இது 2026 சனவரி மாதத்தில் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

(6) ஒரு மூன்று மாத கால நிலையான வைப்பு ரூ. 800,000/- ஆனது 8% ஆண்டு வட்டி வீதத்தில் 2025 அக்டோபர் 01 இல் திறக்கப்பட்டது. வங்கியானது முதல் 3 மாதங்களுக்கான வட்டியை 2026 சனவரி 01 இல் செலுத்தியுள்ளது.

(7) 2025 டிசெம்பர் 31 இல் தொக்குகள் எதுவுமில்லை.

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 டிசெம்பர் 31 இலான **சர்மா கபேயின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 04

சுரேன் ஹாட்வெயார் என்பது **சுரேன்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2025 மார்ச் 31 இல் கணக்குகள் நிறைவேற்றுநரால் தயாரிக்கப்பட்ட **சுரேன் ஹாட்வெயாரின்** பரீட்சை மீதி அதன் செலவுப் பக்கத்தில் ரூ. 26,300/- வித்தியாசத்தைக் காட்டியது. இது தொங்கற் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டு, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்காக **சுரேன் ஹாட்வெயார்** கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணவில்லை.

வித்தியாசத்திற்கான பின்வரும் காரணங்கள் பின்னர் இனங்காணப்பட்டன :

(1) **ABC Ltd.** இடமிருந்து அலுவலகப் பாவனைக்காக 2025 மார்ச் 01 இல் ரூ. 450,000/- இற்கு மேற்கொள்ளப்பட்ட கணினி ஒன்றின் கொள்வனவானது கொள்வனவுக் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது. கணினிகள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானஞ் செய்யப்படுகின்றன. ஆண்டிற்குப் பொருத்தமான தேய்மானம் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(2) **சம்பத்** என்ற கடன்பட்டோரிடமிருந்தான காசுப் பெறுவனவு ரூ. 12,000/- ஆனது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்புடைய வியாபாரக் கடன்பட்டோர் கணக்கிற்குப் பதிலாக விற்பனைக் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டது.

(3) 2025 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூ. 3,500/- ஆனது அட்டுறு செலவினக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) காசுக்குச் செய்யப்பட்ட விற்பனை ரூ. 8,000/- ஆனது காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.

(5) வாடகை செலவினம் ரூ. 25,000/- ஆனது வாடகை செலவினக் கணக்கில் ரூ. 52,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(6) **சுரேன்** தனது சொந்தப் பயன்பாட்டிற்காக எடுத்த காசு ரூ. 5,200/- ஆகும். இது காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

(A) **அன்ரூ** என்பவர் பொம்மைகள் விற்பனை செய்யும் கடை ஒன்றை நடத்துகிறார். பின்வரும் ஊடுசெயல்கள் 2025 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்றிருந்தன :

(1) **அன்ரூ** ஆரம்ப மூலதனமாக ரூ. 6,000,000/- ஐக் காசாக இட்டு, ஒரு வணிகத்தை ஆரம்பித்தார்.

(2) **ABC Ltd.** இடமிருந்து கடனடிப்படையில் ரூ. 1,000,000/- இற்கு அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது.

(3) ரூ. 1,700,000/- இனைக் காசாகவும் மீதியை கடனடிப்படையிலும் செலுத்தும் வகையில் ரூ. 3,500,000/- பெறுமதியான இருப்பு கொள்வனவு செய்யப்பட்டது.

(4) ரூ. 2,500,000/- கிரயமான பொருள்கள் **XYZ டிரேடர்ஸிற்கு** கடனடிப்படையில் ரூ. 3,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன.

(5) செலுத்திய சம்பளங்கள் ரூ. 800,000/-.

(6) **அன்ரூ** தனது சொந்தப் பயன்பாட்டிற்காக ரூ. 100,000/- காசு எடுத்துள்ளார்.

நீங்கள் செய்ய வேண்டியது :

கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்படி ஒவ்வொரு ஊடுசெயலினதும் தாக்கத்தைக் **குறிப்பிடுக.**

[அலுவலக உபகரணம் + இருப்பு + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பரிப்புக்கள்]

(06 புள்ளிகள்)

(B) 2025 டிசெம்பர் 31 இல், **XYZ டிரேடர்ஸின்** வங்கிக் கூற்றானது சாதகமான மீதி ரூ. 29,000/- ஐக் காட்டிய அதே வேளை காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு (சாதகமான) மீதி ரூ. 48,000/- ஐக் காட்டியது.

பின்னர், **XYZ டிரேடர்ஸின்** கணக்குகள் நிறைவேற்றுநர் வங்கிக் கூற்று மீதிக்கும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்குமிடையேயான வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கண்டறிந்தார் :

(1) வழங்குநர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 10,000/- பெறுமதியான ஒரு காசோலை 2025 டிசெம்பர் 31 வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) ஒரு வாடிக்கையாளர், 2025 டிசெம்பர் 20 இல் வங்கிக் கணக்கிற்கு ரூ. 18,000/- ஐ நேரடியாக வைப்புச் செய்திருந்தார். ஆயினும் இந்தத் தொகை காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வங்கியானது வங்கிக் கட்டணம் ரூ. 1,500/- இனை 2025 டிசெம்பர் 30 இல் வரவு வைத்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(4) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ. 8,000/- பெறுமதியான ஒரு காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. ஆயினும் 2025 டிசெம்பர் 31 வரை அது தேறியிருக்க வில்லை.

(5) நிலையான வைப்பு மீதான வட்டி ரூ. 2,500/- ஆனது வங்கியால் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. எனினும் இது தொடர்பில் காசேட்டில் கவனம் செலுத்தப்படவில்லை.

(6) வங்கிக்கு வழங்கப்பட்ட நிலையியற் கட்டளை அறிவுறுத்தலின்படி, கடன் தவணைப்பணம் ரூ.40,000/- ஐ வங்கி வரவு வைத்திருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (02 புள்ளிகள்)

(b) 2025 டிசெம்பர் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 06

விஸ்கம் டிரேடர்ஸ் என்பது **விஸ்வா** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். **விஸ்கம் டிரேடர்ஸின்** 2025 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

விஸ்கம் டிரேடர்ஸ்

2025 மார்ச் 31 இலான பரீட்சை மீதி *(ரூ.'000)*

விபரம்	வரவு	செலவு
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :		
காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி – ரூபா 3,000,000/-)	6,000	
தளபாடமும் பொருத்துகளும்	5,000	
மோட்டார் வாகனங்கள்	4,000	
அலுவலக உபகரணம்	1,000	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :		
கட்டடம்		2,400
தளபாடமும் பொருத்துகளும்		2,500
மோட்டார் வாகனங்கள்		2,000
அலுவலக உபகரணம்		250
விற்பனைகள்		140,000
கொள்வனவுகள்	72,000	
2024 ஏப்ரல் 01 இல் தொக்கு	12,000	
கையிலுள்ள காசும் வங்கியில் உள்ள காசும்	380	
வியாபார வருமதிகள்	32,000	
வியாபார சென்மதிகள்		7,000
வங்கிக் கடன்		4,000
சம்பளங்களும் கூலிகளும்	16,100	
தொலைபேசி கட்டணங்கள்	800	
செலுத்திய களஞ்சிய வாடகை	6,000	
விற்பனைத் தரகு (பணிசை)	3,000	
காப்புறுதிச் செலவினங்கள்	220	
மின்சாரச் செலவினங்கள்	1,500	
அலுவலகச் செலவினங்கள்	1,350	
பாதுகாப்புக் கட்டணங்கள்	600	
பயணமும் போக்குவரத்துச் செலவினமும்	1,400	
2024 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு		5,200
மொத்தம்	**163,350**	**163,350**

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2025 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு, கிரயத்தில் ரூ. 6,500,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக 10% வருடாந்த வட்டி வீதத்தில் 2025 சனவரி 01 இல் வங்கிக் கடன் ரூ. 4,000,000/- பெற்றுக் கொள்ளப்பட்டது. இதனை 2025 ஏப்ரல் 01 இலிருந்து 12 மாத காலத்தினுள் முற்றாகச் செலுத்தி முடிக்க இணங்கிக் கொள்ளப்பட்டது. 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டியானது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வணிகத்தின் கொள்கையானது கீழ்வருமாறு கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்வதாகும் :

கட்டடம்	:	ஆண்டிற்கு 10%
தளபாடமும் பொருத்துகளும்	:	ஆண்டிற்கு 20%.
மோட்டார் வாகனங்கள்	:	ஆண்டிற்கு 25%.
அலுவலக உபகரணம்	:	ஆண்டிற்கு 25%.

(4) விற்பனை மீதான 5% விற்பனைத் தரகானது வணிகத்தின் விற்பனை அணியினருக்குச் செலுத்தப் பட்டது. 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின் காலப்பகுதியில் ரூ. 3,000,000/- செலுத்தப் பட்டதுடன் மீதித் தொகை 2025 ஏப்ரலில் செலுத்தப்பட்டது.

(5) "செலுத்திய களஞ்சிய வாடகை" இல் 2025 ஏப்ரல் முதல் 2025 யூன் வரையான காலப்பகுதிக்குப் பொருந்தக்கூடிய ரூ. 1,200,000/- உள்ளடங்குகிறது.

(6) **விஸ்வா** ரூ. 2,000,000/- பெறுமதி கொண்ட வியாபாரக் கடன்பட்டோரை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யவும் 2025 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதிகள் மீதியில் ஐயக் கடன்களுக்காக 5% ஏற்பாட்டைச் செய்யவும் தீர்மானித்தார்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்க** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	**வரைக (Draw)**	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	**ஏற்பிசைவு செய்க (Recognize)**	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	**கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)**	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	**தொடர்பாடுக(Communicate)**	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்